<u>செய்தி வெளியீடு</u> <u>நாள் : 6.1.2024</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கிளாம்பாக்கத்தில் திறந்து வைக்கப்பட்ட "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில்" பயணிகள் சுலபமாக செல்வதற்காக வெளியூர் பேருந்துகள் நிற்கும் இடத்திற்கும் மாநகரப் பேருந்து நிலையத்திற்கும் (MTC) இடையில் 500 மீட்டர் நீளத்தில் மாற்று வழி பாதை அமைப்பது குறித்தும் மற்றும் பயணிகளுக்கு தேவையான கூடுதல் வசதிகள் குறித்தும்**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் துறைச் சார்ந்த அலுவலர்களுடன் ஒருங்கிணைந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**

********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் திறந்து வைக்கப்பட்ட **"கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை"** இன்று (6.1.2024) மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, இம்முனையத்தில் பயணிகள் சுலபமாக செல்வதற்காக வெளியூர் பேருந்துகள் நிற்கும் இடத்திற்கும் மாநகரப் பேருந்து நிலையத்திற்கும் (MTC) இடையில் 500 மீட்டர் நீளத்தில் மாற்று வழி பாதை அமைப்பது குறித்தும், SETC மற்றும் TNSTC பேருந்துகள் நிற்கும் இடத்திற்கும் மாநகரப் பேருந்து நிலையத்திற்கும் இடையில் பயணிகள் செல்ல வசதியாக நகரும் நடைமேடை அமைப்பது குறித்தும், ஜி.எஸ்.டி சாலையை கடப்பதை தடுக்கும் வகையில் சாலையின் மையத்தடுப்பை உயரமாக அமைப்பது குறித்தும் மற்றும் பயணிகளுக்கு தேவையான கூடுதல் வசதிகள் குறித்தும் துறைச் சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்ததாவது :**

செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள **"கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் 30.12.2023 அன்று திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். **கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்** மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. தினம்தோறும் 5,000–க்கும் மேற்பட்ட பயணிகள் தற்போது பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இப்பேருந்து முனையத்தில் பயணிகளுக்கு தேவையான அனைத்து கூடுதல் வசதிகளையும், அடிப்படை வசதிகளையும் பயணிகளிடம் கேட்டறிந்து, தேவைகளை பூர்த்தி செய்கின்ற பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம்.

இம்முனையத்தில் பயணிகள் சுலபமாக செல்வதற்காக வெளியூர் பேருந்துகள் நிற்கும் இடத்திற்கும் மாநகரப் பேருந்து நிலையத்திற்கும் (MTC) இடையில் 500 மீட்டர் நீளத்தில் மாற்று வழி பாதை அமைப்பது குறித்தும், SETC மற்றும் TNSTC பேருந்துகள் நிற்கும் இடத்திற்கும் மாநகரப் பேருந்து நிலையத்திற்கும் இடையில் பயணிகள் செல்ல வசதியாக நகரும் நடைமேடை அமைப்பது குறித்தும், ஜி.எஸ்.டி சாலையை கடப்பதை தடுக்கும் வகையில் சாலையின் மையத்தடுப்பை உயரமாக அமைப்பது குறித்தும், மழைநீர்

வடிகால்வாய் பணிகளுக்கும் பேருந்துகளை சிரமமின்றி இயக்குவதற்கும் சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்தும், வண்டலூர் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து கேளம்பாக்கம் செல்ல திரும்பும் இடத்தில் மத்திய தடுப்புசுவரினை அகற்றி சாலையை விரிவுபடுத்துதல் குறித்தும், அரசு ஆதிதிராவிடர் நலத்துறை ஆரம்பப் பள்ளியின் நுழைவாயிலை பள்ளியின் பின்புறமாக மாற்றுவது குறித்தும், மழைநீர் வடிகால்வாய் பணிகளுக்கும் பேருந்துகளை சிரமமின்றி இயக்குவதற்கும் சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்தும், போக்குவரத்து நெரிசலை தவிர்க்க 1A மற்றும் 1B நுழைவாயில்கள் அருகிலுள்ள பாதைகளை அகலப்படுத்துவது குறித்தும், ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களின் வசதிக்காக பணிமனை மற்றும் ஓய்வறைகளை பணியில்லாப் பேருந்துகள் நிறுத்தும் இடத்தின் அருகிலேயே அமைப்பது குறித்தும், கிளாம்பாக்கம் இரயில் நிலையத்திற்கும் பேருந்து முனையத்திற்கும் நடுவே சாலையை கடப்பதற்கு நடைமேம்பாலம் அமைப்பதற்கு, விரைவாக பணிகளை மேற்கொள்வது குறித்தும் போக்குவரத்துத் துறை, நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை, கும்டா, வருவாய்த்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

இப்படி வாரம் தோறும் இரண்டு நாட்களாவது கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தினுடைய தேவைகளை அறிந்து முழுமையாக இந்த கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் முழுமையாக மக்கள் மகிழ்ச்சியோடு பயன்படுத்துகின்ற அளவிற்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் படிப்படியாக நிறைவேற்றி தருவோம் என்ற உறுதியை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். **இவ்வாறு மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், கும்டா சிறப்பு அலுவலர் திரு.ஐ.ஜெயக்குமார், ஐ.ஆர்.டி.எஸ்., அவர்கள், அவர்கள், சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் திருமதி.ப.காயத்ரி கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், மாநகர் போக்குவரத்துக் கழக (MTC) மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் இ.ஆ.ப. அவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.ர.ராகுல் நாத், இ.ஆ.ப., அவர்கள், காவல் துணை ஆணையர்கள் (தாம்பரம் சட்டம் & ஒழுங்கு) திரு.பவன் குமார், இ.கா.ப., அவர்கள், இணை போக்குவரத்து ஆணையர் (விதிகள்) திரு.ஆ.ஆ.முத்து, மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி.மு.இந்துமதி, திருமதி.நா.அங்கையர்கண்ணி, மாநகர் போக்குவரத்துக் கழக (MTC) இணை மேலாண் இயக்குநர் திரு.கே.குணசேகரன், அரசு விரைவு போக்குவரத்துக் கழக (SETC) பொது மேலாளர் திரு. வி.குணசேகரன், தலைமை பொறியாளர் திரு.சீனிவாச ராவ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.